**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.10.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 2023-2024**

**உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக்கல்லூரிகள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் பட்டயப்படிப்புகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) **06.11.2023** அன்று நடைபெற உள்ளது.

**உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) நடைபெறும் விதம் : நேரடி கலந்தாய்வு**

உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கலந்தாய்விற்குரிய குறிப்பிட்ட தேதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ,கோயமுத்தூரில் உள்ள அண்ணா அரங்கத்தில் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ள நிபந்தனைகள்:**

- ❖ உடனடி மாணவர் சேர்க்கையில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்களிடமிருந்து மட்டுமே கலந்தாய்வு கட்டணம் பெறப்படும் மற்றும்
- ❖ உடனடி மாணவர் சேர்க்கைக்கு நகர்வு முறை (Sliding System) கிடையாது.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ளலாம்?**

பட்டயப்படிப்பிற்கான கலந்தாய்வில் ஏற்கனவே கலந்து கொள்ளதாவர்கள், கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று சான்றிதழ் சரிபார்ப்பினை தவற விட்டவர்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டு கல்லூரியில் சேராதவர்கள்கலந்து கொள்ளலாம்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ள கூடாது?**

மாணவர் சேர்க்கை பெற்று இடைநிறுத்தம் செய்து கொண்டவர்கள்கலந்து கொள்ளகூடாது.

**உடனடி மாணவர் சேர்க்கைக்குரிய கட்டணம்:**

பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ளும் மாணவர்கள் , கல்லூரியை தேர்வு செய்யும் முன் கலந்தாய்வு கட்டணம் செலுத்த தேவையில்லை . கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் SC/SCA/ST பிரிவு ரூபாய். 100/- மற்றும் இதர பிரிவினர் ரூபாய் . 200/-செலுத்த வேண்டும்.

**உடனடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாளன்று பின்பற்ற வேண்டியவை**

- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் வளாகத்திற்கு வர வேண்டும்.
- உடனடி மாணவர் சேர்க்கையின் போது இணைப்புக் கல்லூரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் குறித்த விவரங்களை, மாணவர்கள் இணைப்புக் கல்லூரிகளிடம் அறிந்து கொள்ள வேண்டும். இதற்கான தொலைபேசி எண்கள் தகவல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. (பக்கஎண். 5 to 7 தகவல் கையேடு 2023 (Diploma Information Brochure 2023), இணையதள முகவரிhttp://tnagfi.ucanapply.com).
- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொண்ட மாணவர்களின்வருகைப் பதிவேடு குறிக்கப்பட்டு, தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- உடனடி மாணவர் சேர்க்கையின்போது மாணவர்களுக்கு கல்லூரி காலியிடம் திரையில் தெரிவிக்கப்படும்.
- தரவரிசையின் மற்றும் சாதிய அடிப்படையில், மாணவர்கள் கல்லூரி மற்றும் பட்டயப்படிப்பினை தேர்வு செய்து கொள்ளலாம்.
- உடனடி மாணவர் சேர்க்கையின் போது இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட சேர்க்கை கட்டணமான ரூபாய்.5,000/- தைசெலுத்தி உடனடியாக கல்லூரியில் சேரலாம், பணம் கட்டுவதற்கான வசதி பல்கலைக்கழக வளாகத்திலேயே செய்யப்பட்டு இருக்கும்.
- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்க இயலாது.

உடனடி மாணவர் சேர்க்கைக்கான(Spot Admission) காலியிடங்களுக்குரிய அட்டவணை 05.11..2023 அன்று http://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். மாணவர் சேர்க்கைக்கான காலியிடங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

உடனடி மாணவர் சேர்க்கை குறித்த விவரங்களை அறிய விரும்பும் மாணவர்கள் 9488635077, 9486425076 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் அல்லது **ugadmissions@tnau.ac.in** என்ற மின்னஞ்சல் முகவரியை அணுகலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**